Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW
SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmil.com

RNI No. : TNTAM24840

தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Tamilnadu Association For The Rights of All Types of Differently Abled and Caregivers - TARATDAC
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன்கிழமை, மே 01, 2024 | இதழ் 18

## சத்தீஷ்கரில் என்கவுண்ட்டர்: 7 நக்சலைட்டுகள் சுட்டுக்கொலை



சென்னை, 01 மே 2024: சத்தீஷ்கரில் பாதுகாப்புப் படையினர் நடத்திய என்கவுண்ட்டரில் 7 நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சத்தீஷ்கர், மராட்டியம், ஜார்க்கண்ட் போன்ற மாநிலங்கள் நக்சலைட்டுகள், மாவோயிஸ்ட்டுகளின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. இந்த நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை ஒடுக்கும் நடவடிக்கையில் மாநில சிறப்பு தனிப்படை போலீசாருடன் இணைந்து மத்திய ரிசர்வ் போலீசாரும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், சத்தீஷ்கரின் நாராயன்பூர் மற்றும் கன்கர் மாவட்டங்களின் எல்லையையொட்டி வனப்பகுதியில் நக்சலைட்டுகள் பதுங்கி இருப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, அந்த வனப்பகுதியில் இன்று காலை மாநில சிறப்பு தனிப்படை போலீசார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு பதுங்கி இருந்த நக்சலைட்டுகள் போலீசார் மீது திடீர் துப்பாக்கிச்சூடு தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலையடுத்து போலீசாரும் பதிலடி துப்பாக்கிச்சூடு நடத்தினர். போலீசார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 7 நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

## தமிழகம் உள்பட நாடுமுழுவதும் மருத்துவமனைகள், விமான நிலையங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல்




சென்னை, 01 மே 2024: தமிழகம் உள்பட நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகள், விமான நிலையங்கள் மற்றும் அரசு அலுவலகங்களில் வெடிகுண்டுகள் வெடிக்கும் என்று இமெயில் மூலம் மிரட்டல் வந்துள்ளது. இது தொடர்பாக காவல்துறைக்கு தகவல்கள் கிடைத்தன.

இது தொடர்பாக காவல்துறை உடனடியாக விசாரணை நடத்தத் தொடங்கினர். 100க்கும் மேற்பட்ட இ மெயில் முகவரிகள் மூலம் இந்த வெடிகுண்டு மிரட்டல் வந்தது தெரியவந்து.

தமிழகத்தில் சென்னை உள்பட பல மருத்துவமனைகளுக்கு இந்த வெடிகுண்டு மிரட்டல் வந்தது. இதையடுத்து மருத்துவமனைகளுக்கு வெடிகுண்டு நிபுணர்கள் விரைந்து சென்று சோதனை நடத்தினார்கள். அந்த மருத்துவமனைகளிலிருந்து நோயாளிகள் உடனடியாக வெளியேற்றப்பட்டு தீவிர சோதனை நடத்தப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் மாருதி நகர் பகுதியில் மித்ர லீலா என்ற தனியார் குழந்தைகள் மருத்துவமனை இயங்கி வருகிறது. இங்கு உள்நோயாளிகள் சிகிச்சை பெறும் வகையில் 30 படுக்கை வசதிகள் உள்ளன. தி.மு.க., நிர்வாகியான ஒசூர் அரசனட்டி பகுதியை சேர்ந்த நவீன் குமார் என்பவர் மருத்துவமனையை நடத்தி வருகிறார். திமுகவை சேர்ந்த இவரது மனைவி லட்சுமி ஒசூர் மாநகராட்சி கவுன்சிலராக உள்ளார். இவரும் இதே மருத்துமனையில் டாக்டராக பணியாற்றி வருகிறார்.

இன்று காலை 11:30 மணியளவில் மருத்துவமனைக்கு இமெயில் வாயிலாக வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளது. போலீசார் வெடிகுண்டு நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய்களுடன் விரைந்து சென்று சோதனை நடத்தினர். மருத்துவமனையிலிருந்த நோயாளிகள் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர். இது குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

டெல்லியில் உள்ள ஒரு ஆஸ்பத்திரியில் வெடிகுண்டு மிரட்டல் கா□ரணமாக நோயாளிகள் அவசரம் அவசரமாக வெளியேற்றப்பட்டனர். இந்த வெடிகுண்டு மிரட்டலை விடுத்தது யார் என்பது பற்றி விசாரணை நடந்து வருகிறது. அதுபோல நாடு முழுவதும் 30 விமான நிலையங்களுக்கும், பல்வேறு அரசு அலுவலகங்களுக்கும் மின்னஞ்சல் மூலம் மிரட்டல் வந்துள்ளது. நாடு முழுவதும் மருத்துவமனைகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## கோவை தேர்தல் முடிவை நிறுத்தக் கோரிய வழக்கு: ஐகோர்ட் தள்ளுபடி





சென்னை, 01 மே 2024: கோவை மக்களவை தேர்தல் முடிவை வெளியிட தடை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை சென்னை ஐகோர்ட் நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர்.

ஆஸ்திரேலியாவில் மருத்துவராக பணியாற்றிவரும் கோவை நஞ்சுண்டாபுரத்தைச் சேர்ந்த சுதந்திரகண்ணன் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் மனு ஒன்றை தாக்கல் செய்தார். அதில் கோவை மக்களவைத் தொகுதியில் நடைபெற்ற தேர்தலில் வாக்களிக்க எனது மனைவியுடன் ஆஸ்திரேலியாவில் இருந்து கோவைக்கு வந்திருந்தேன். ஆனால் வாக்காளர் பட்டியலில் எனது பெயரும், எனது மனைவியின் பெயரும் நீக்கப்பட்டுள்ளது.

எனவே நீக்கப்பட்ட வாக்காளர்களை மீண்டும் பட்டியலில் சேர்த்து, அவர்களை வாக்களிக்க அனுமதிக்க வேண்டும். அதுவரை கோவை தொகுதிக்கான தேர்தல் முடிவுகளை அறிவிக்க தடை விதிக்கவேண்டும் என கோரியுள்ளார். இந்த மனு சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி சத்தியநாராயண பிரசாத் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, தேர்தல் ஆணைய வழக்கறிஞர் நிரஞ்சன் ராஜகோபாலன் தனது வாதத்தில், மனுதாரரின் பெயர் வாக்காளர் பட்டியலில் இருந்து 2021ம் ஆண்டிலேயே நீக்கப்பட்டுள்ளது என்று கூறினார். இதனையடுத்து வாக்காளர் பட்டியலில் இருந்து விடுபட்டோரை மீண்டும் பட்டியலில் இணைத்து ஓட்டுப்போட அனுமதிக்க தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட முடியாது.

பெயர் நீக்கப்பட்ட வாக்காளர்களை மீண்டும் இணைத்து வாக்களிக்க அனுமதிக்க கோரும் நீங்கள், ஜனவரியில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியானபோது என்ன செய்தீர்கள்? என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

தொடர்ந்து கோவை மக்களவைத் தேர்தல் முடிவை வெளியிட தடை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை தள்ளுபடி செய்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# பத்ம விருதுகள்-2025-க்கான பரிந்துரைகள் தாக்கல் தொடங்கியது

சென்னை, 01 மே 2024: 2025-ம் ஆண்டு குடியரசு தினத்தை முன்னிட்டு அறிவிக்கப்படவுள்ள அந்த ஆண்டின் பத்ம விருதுகளுக்கான ஆன்லைன் பரிந்துரைகள் தாக்கல் செய்வது இன்று தொடங்கியுள்ளது. பத்ம விருதுகளுக்கான பரிந்துரைகளை அனுப்ப கடைசி தேதி செப்டம்பர் 15 ஆகும். பத்ம விருதுகளுக்கான பரிந்துரைகள் ராஷ்ட்ரிய புரஸ்கார் போர்ட்டலில் (https://awards.gov.in) ஆன்லைனில் பெறப்படும்.

பத்ம விருதுகளான பத்ம விபூஷண், பத்ம பூஷண் மற்றும் பத்மஸ்ரீ ஆகியவை நாட்டின் மிக உயர்ந்த சிவிலியன் விருதுகளாகும். 1954 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த விருதுகள் ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினத்தன்று அறிவிக்கப்படுகின்றன. கலை, இலக்கியம், கல்வி, விளையாட்டு, மருத்துவம், சமூகப்பணி, அறிவியல் மற்றும் பொறியியல், பொது விவகாரங்கள், சிவில் சேவை, வர்த்தகம் மற்றும் தொழில்துறை போன்ற அனைத்து துறைகள் / பிரிவுகளில் புகழ்பெற்ற மற்றும் சிறப்பான சாதனைகள் / சேவைகளுக்காக இந்த விருது வழங்கப்படுகிறது. இனம், தொழில், பதவி அல்லது பாலின வேறுபாடின்றி அனைத்து நபர்களும் இந்த விருதுகளுக்கு தகுதியானவர்கள். மருத்துவர்கள் மற்றும் விஞ்ஞானிகள் தவிர, பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் உள்ளிட்ட அரசு ஊழியர்கள் பத்ம விருதுகளுக்கு தகுதியற்றவர்கள்.

பத்ம விருதுகளை மக்களின் பத்ம விருதுகளாக மாற்ற அரசு உறுதிபூண்டுள்ளது. எனவே, அனைத்து குடிமக்களும் சுய நியமனம் உட்பட பரிந்துரைகளை செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மகளிர், சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினர், ஆதிதிராவிடர் & பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் சமுதாயத்திற்கு தன்னலமற்ற சேவை செய்து வருபவர்களின் சிறப்பான மற்றும் சாதனைகள் உண்மையிலேயே அங்கீகரிக்கப்பட வேண்டிய திறமை வாய்ந்த நபர்களைக் கண்டறிய ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம்.

பரிந்துரைகள் மேலே கூறப்பட்ட போர்ட்டலில் கிடைக்கும் வடிவமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தொடர்புடைய விவரங்களையும் கொண்டிருக்க வேண்டும். இதில் கதை வடிவத்தில் மேற்கோள் (அதிகபட்சம் 800 வார்த்தைகள்) உட்பட, பரிந்துரைக்கப்பட்ட நபரின் தனித்துவமான மற்றும் சிறப்பான சாதனைகள் / சேவையை தெளிவாக வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

இது தொடர்பான விவரங்கள் மத்திய உள்துறை அமைச்சகத்தின் இணையதளத்தில் (https://mha.gov.in) 'விருதுகள் மற்றும் பதக்கங்கள்' என்ற தலைப்பிலும், பத்ம விருதுகள் இணையதளத்திலும் (https://padmaawards.gov.in) உள்ளன. இவ்விருதுகள் தொடர்பான சட்டங்கள் மற்றும் விதிகள் இணையதளத்தில் https://padmaawards.gov.in/AboutAwards.aspx என்ற இணைப்புடன் வெளியிடப்பட்டுள்ளன.

# போலி ஐஎஸ்ஐ முத்திரை பயன்படுத்திய பேக்கேஜ் செய்யப்பட்ட குடிநீர் தொழிற்சாலையில் பிஐஎஸ் அதிகாரிகள் இன்று அதிரடி சோதனை





சென்னை, 01 மே 2024: பொன்னேரி தாலுகா, சோழவரம் தொகுதி, அலமாதி கிராமத்தில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்படாத குடிநீர் பாட்டில் தொழிற்சாலை இந்திய தர நிர்ணயச் சட்டம், 2016-ஐ மீறுவதாக சந்தேகிக்கப்படும் தகவலின் அடிப்படையில், 2024, மே 1 அன்று இந்திய தர நிர்ணய அமைவன (பிஐஎஸ்), சென்னை கிளை அலுவலகத்தின் அதிகாரிகள் சட்ட அமலாக்கத் தேடல் மற்றும் பறிமுதல் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்த நடவடிக்கையின் போது போலியான ஐஎஸ்ஐ முத்திரையுடன் குடிநீர் நிரப்பப்பட்ட 2 லிட்டர் கொள்ளளவு கொண்ட 1,782 பாட்டில்கள், ஒரு லிட்டர் கொள்ளளவு கொண்ட 11,616 பாட்டில்கள், 500 மில்லி லிட்டர் கொள்ளளவு கொண்ட 9,600 பாட்டில்கள், 300 மில்லி லிட்டர் கொள்ளளவு கொண்ட 10,465 பாட்டில்கள் கைப்பற்றப்பட்டன. மேலும், போலியான ஐஎஸ்ஐ முத்திரை பொறிக்கப்பட்ட சுமார் 2,58,000 லேபிள்களும் கைப்பற்றப்பட்டன.

இந்த சோதனை நடவடிக்கையில் இந்திய தர நிர்ணய அமைவனத்தின் இணை இயக்குநர் திரு ஸ்ரீஜித் மோகன், துணை இயக்குநர் திரு தினேஷ் ராஜகோபாலன் மற்றும் ஊழியர்கள் ஈடுபட்டனர்.

இந்த நிறுவனத்தின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிஐஎஸ் சென்னைக் கிளை அலுவலகத் தலைவர் திருமதி ஜி. பவானி தெரிவித்தார். இந்தக் குற்றத்திற்கு முதல் மீறலுக்கு 2 ஆண்டுகள் வரை சிறைதண்டனை அல்லது ரூ. 2 லட்சத்திற்குக் குறையாத அபராதம் விதிக்கப்படும் என்றும் அல்லது பயன்படுத்தப்படும் பொருட்கள், தயாரிக்கப்பட்ட அல்லது ஒட்டப்படும் பொருட்களின் மதிப்பில் 10 மடங்கு வரை அபராதம் நீட்டிக்கப்படலாம்.

இது போன்ற விதி மீறல் தகவல்கள் பொதுமக்களுக்கு தெரியவந்தால், பிஐஎஸ் சென்னை கிளை அலுவலகம், சிஐடி வளாகம், 4-வது குறுக்கு சாலை, தரமணி, சென்னை-600 113 என்ற முகவரிக்கு தகவல் தெரிவிக்கலாம். அல்லது பிஐஎஸ் கேர் செயலியைப் பயன்படுத்தியோ அல்லது cnbo1@bis.gov.in என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலமாகவோ தெரிவிக்கலாம். தகவல்களின் ஆதாரம் கண்டிப்பாக ரகசியமாக வைக்கப்படும்.

# ஆயுதப்படைகளின் மிகப்பெரிய பல் மருத்துவ நிறுவனமான ராணுவ பல் மருத்துவ மையம் (ஆராய்ச்சி மற்றும் பரிந்துரை) அதன் வெள்ளி விழாவைக் கொண்டாடுகிறது




சென்னை, 01 மே 2024: 2024 மே 1 அன்று 25-வது நிறுவனத் தினத்தைக் கொண்டாடியது. இந்நிகழ்ச்சியில் மேற்குப் பகுதி தலைமை கமாண்டர் லெப்டினன்ட் ஜெனரல் எம்.கே.கட்டியார் பல் மருத்துவ மையத்தைப் பார்வையிட்டு சிறப்புத் தபால் உறையை வெளியிட்டார்.

இந்த விழாவில் பல் மருத்துவ சேவைகள் தலைமை இயக்குநர் லெப்டினன்ட் ஜெனரல் வினீத் சர்மா மற்றும் மையத்தின் முன்னாள் தளபதிகள் கலந்து கொண்டனர். பல் மருத்துவக் கல்வி, ஆராய்ச்சி, நோயாளிகுள் பராமரிப்பு ஆகியவற்றில் முன்னணி நிறுவனமாக மாறுவதற்கு ராணுவ பல் மருத்துவ ஆராய்ச்சி மற்றும் பரிந்துரை மையத்தின் அனைத்து சாதனைகள் மற்றும் முயற்சிகளை பிரிகேடியர் எஸ்.எஸ்.சோப்ரா விளக்கினார்.

ராணுவ பல் மருத்துவ ஆராய்ச்சி மற்றும் பரிந்துரை மையம் என்பது ஆயுதப் படைகளின் மிகப்பெரிய பல் மருத்துவ நிறுவனமாகும். இது பல் மருத்துவத்தின் ஐந்து சிறப்புப் பிரிவுகளில் முதுநிலைப் பயிற்சியை வழங்குகிறது

மேற்குப் பகுதியில் உள்ள அனைத்து ராணுவ அணிகளுடனும் கலந்துரையாடிய மேற்குப் பகுதி தலைமை கமாண்டர் லெப்டினன்ட் ஜெனரல் எம்.கே.கட்டியார், பல் மருத்துவ மையத்தால் வழங்கப்பட்ட சிறந்த சேவையையும் பாராட்டினார். படைவீரர்கள், அவர்களின் குடும்பத்தினர் மற்றும் முன்னாள் வீரர்களுக்கு அதிநவீன உயர் நிலைக் கவனிப்பை தொடர்ந்து வழங்குமாறு அனைத்துத் தரப்பினரையும் அவர் கேட்டுக்கொண்டார். மேலும் ஒவ்வொருவரும் இப்போதுள்ள தொழில்முறை ஆர்வத்துடன் தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என்று அறிவுறுத்தினார். நோயாளிகள் பராமரிப்பு வசதிகளில் தொடர்ச்சியான முன்னேற்றங்களுக்காக ராணுவ பல் மருத்துவ ஆராய்ச்சி மற்றும் பரிந்துரை மையத்தின் ஊழியர்களை அவர் பாராட்டினார்.

# விருதுநகர் மாவட்டம் கல்குவாரியில் வெடி விபத்து: 4 தொழிலாளர்கள் பலி! மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேதனை! உரிய விசாரணையும், தக்க இழப்பீடும் வழங்கிட வலியுறுத்தல்!

சென்னை, 01 மே 2024: சிபிஎம் மாநில செயலாளர் கே. பாலகிருஷ்ணன் தனது அறிக்கையில் :- விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி அருகே தனியார் கல்குவாரியில் ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி 4 தொழிலாளர்கள் உடல் சிதறி உயிரிழந்துள்ளதும், பலர் படுகாயமுற்று ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதும் வேதனையளிக்கிறது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

குவாரியில் உள்ள குடோனில் வெடி மருந்துகளை இறக்கிய போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. குவாரியில் தொழிலாளர்கள் பலர் சிக்கியிருப்பதால் உயிரிழப்பும் அதிகாரிக்க கூடும் என்று தெரிகிறது. இந்த வெடிவிபத்தினால் அருகில் உள்ள சுமார் 20 கி.மீ. தூரம் வரை அதிர்வுகள் ஏற்பட்டு வீடுகள் சேதமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. இதனால் இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் உயிருக்கு பயந்து பெரும் அச்சத்தில் உள்ளனர். இந்த கல்குவாரியை உடனடியாக மூட வலியுறுத்தி வருகின்றனர்.

எனவே, இந்த விபத்து குறித்து உரிய முறையில் விசாரணை செய்து சட்டப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ரூ. 25 லட்சம் இழப்பீடு வழங்கிடவும், ஆபத்தான நிலையில் சிகிச்சை பெறுபவர்களுக்கு உயரிய தரமான சிகிச்சை அளிக்கவும், இப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று இந்த கல்குவாரியை உடனடியாக மூடவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழக அரசை வலியுறுத்துகிறது.

மேலும், இது போன்று அசம்பாவித சம்பவங்கள் ஏதும் நடைபெறாமல் இருப்பதற்கு தமிழகம் முழுவதும் உள்ள கல்குவாரிகளை உரிய முறையில் கண்காணிக்கவும், உரிமம் இல்லாமலும், விதிமுறைகளை மீறும் குவாரிகளை உடனடியாக இழுத்து மூடுவதோடு சம்பந்தபட்டவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது இவ்வாறு கூறியுள்ளார்.

# தேர்தல் ஆணையத்தின் தீவிர அக்கறையின் பலனாக வாக்களிக்க ஆர்வம் காட்டிய பழங்குடியின சமூதாயத்தினர்




சென்னை, 01 மே 2024: கடந்த இரண்டு ஆண்டுகளாக, தேர்தல் செயல்பாட்டில் குறிப்பாக பாதிப்புக்குள்ளாகக்கூடிய பழங்குடியின குழுக்கள், சமூகங்கள் மற்றும் பிற பழங்குடியின குழுக்களை சேர்ப்பதற்கான தேர்தல் ஆணையத்தின் முயற்சிகள் பலனளிக்க தொடங்கியுள்ளன. தேர்தல் ஆணையத்தின் முயற்சிகள் காரணமாக, பல்வேறு மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் உள்ள பழங்குடியின குழுக்கள் பொதுத் தேர்தலின் முதல் இரண்டு கட்டங்களில் உற்சாகமாக பங்கேற்றுள்ளன.

ஒரு வரலாற்று நகர்வாக, கிரேட் நிக்கோபாரின் ஷோம்பென் பழங்குடியினர் முதல் முறையாக பொதுத் தேர்தலில் வாக்களித்தனர்.

பாதிப்புக்குள்ளாகக்கூடிய குழுக்கள், தேர்தல் நடைமுறையில் சேர்க்கப்படுவதை இந்திய தேர்தல் ஆணையம் உணர்ந்திருப்பதால், கடந்த இரண்டு ஆண்டுகளில் அவர்கள் வாக்காளர்களாக சேர்க்கப்படுவதற்கும், வாக்களிப்பு செயல்முறையில் பங்கேற்பதற்கும் சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டது. வாக்காளர் பட்டியலை புதுப்பிப்பதற்கான சிறப்பு சுருக்க திருத்தத்தின் போது, வாக்காளர் பட்டியலில் சேர்க்க பழங்குடியினர் அதிகமாக வசிக்கும் குறிப்பிட்ட மாநிலங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. 2022, நவம்பர் மாதம் புனேயில் நடந்த செய்தியாளர் சந்திப்பின் போது, தேசிய அளவிலான சிறப்பு சுருக்க திருத்தம் தொடக்க விழாவில், தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ் குமார், பழங்குடியினரை நாட்டின் பெருமைமிக்க வாக்காளர்களாக பதிவு செய்வதற்கும், அதிகாரம் அளிப்பதற்கும் ஆணையம் கவனம் செலுத்தும் என்று கூறியிருந்தார்.

அதன்படி, மத்தியப்பிரதேசம், கர்நாடகா, கேரளா, திரிபுரா, ஒடிசா, தமிழ்நாடு, சத்தீஷ்கர் ஆகிய மாநிலங்களில் பழங்குடியினரை தேர்தல் நடைமுறைகளில் ஈடுபடுத்த செய்வது தொடர்பான நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டது.

தமிழ்நாட்டில் குட்டுநாயக்கன், கோட்டா, குரும்பா, இருளர், பனியன், தோடா ஆகிய 6 மக்கள் உரிமை கோரும் குழுக்கள் 2,26,300 மக்கள் தொகை கொண்டது. இதில் 1,62,049 பேர் 18 வயது பூர்த்தியான தகுதி வாய்ந்த வாக்காளர்களாக கண்டறியப்பட்டனர். இதில் 1,61,932 பேர் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள். கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் திருப்பத்தூர் போன்ற மண்டலங்களில் குறிப்பிடத்தக்க கவனம் செலுத்தி, 23 மாவட்டங்களில் ஒரு விரிவான பிரச்சாரம் வாக்காளர்கள் சேர்க்கைக்கு முன்னுரிமை அளித்துள்ளது.

ஆர்வமுள்ள வாக்காளர்கள் அடர்ந்த காடுகள், நீர்வழிகள் வழியாக நடந்து செல்வது போன்ற பல்வேறு வழிகளில் வாக்குச்சாவடியை அடைந்து மக்களவைத் தேர்தலில் தங்கள் பங்கேற்பை உறுதி செய்தனர்.

இந்தியாவில் 8.6% பழங்குடியின மக்கள் உள்ளனர். இதில் 75 பழங்குடியின குழுக்கள் உள்ளன. அவை குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடியின குழுக்கள் ஆகும். முன்னர் அணுக முடியாத பகுதிகளில் புதிய வாக்குச் சாவடிகள் அமைந்திருப்பது பழங்குடியினரை பெரிய அளவில் சேர்க்க வழிவகுத்தது. கடந்த 11 மாநில சட்டமன்றங்களுக்கான தேர்தல்களில், கமார், புஞ்சியா, பைகா, பஹாடி கோர்வா, அபுஜ்மதியா, பிர்ஹோர், சஹாரியா, பாரியா, செஞ்சு, கோலம், தோட்டி, கொண்டரெட்டி, ஜெனு குருபா மற்றும் கோரகா ஆகிய 14 பழங்குடியினர் சமூகங்களைச் சேர்ந்த சுமார் 9 லட்சம் வாக்காளர்கள் வாக்களித்தனர். ஆணையத்தின் சிறப்பு முயற்சிகள் அந்த மாநிலங்களில் 100% பழங்குடியினர் சேர்க்கையை உறுதி செய்தன.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# முதன்மை நோயெதிர்ப்பு குறைபாடு கோளாறுகள் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கவும் அதற்கு எதிரான தீவிர நடவடிக்கையை விரைவுபடுத்தவும் வலியுறுத்தும் அப்போலோ கேன்சர் சென்டர்ஸ் வழிவகுக்கும்




சென்னை, 01 மே 2024: முதன்மை நோயெதிர்ப்புத்திறன் பற்றாக்குறை கோளாறு (பி ஐ டி) என்பது முன்வைக்கும் சவால்கள் பெரும்பாலும் உரிய கவனம் செலுத்தப்படாமல் விடப்படும் நிலையில், அது குறித்த விழிப்புணர்வை உயர்த்துவது மற்றும் உரிய சிகிச்சையை தொடக்க நிலையிலேயே வழங்குவதை அப்போலோ கேன்சர் சென்டர்ஸ் வலுவாக அறிவுறுத்துகிறது. ஏப்ரல் 22 முதல் 29-ம் தேதி வரை அனுசரிக்கப்படும் உலக முதன்மை நோயெதிர்ப்புத்திறன் பற்றாக்குறை வாரத்தையொட்டி இந்த முக்கியமான சுகாதார பிரச்சனை மீது மக்களின் கவனத்தை ஈர்க்கும் விவாதத்தை தூண்டுகிற ஏ சி சி, அதன் பாதிப்பு குறித்து விரிவான தகவலை வழங்குகிறது. பி ஐ டி எனப்படும் கோளாறுகள், உடலின் நோயெதிர்ப்பு அமைப்பை பாதிக்கிறவாறு பெற்றோரிடமிருந்து மரபு ரீதியாக பெறப்படும் நோய்களின் ஒரு தொகுப்பை குறிக்கிறது; தொற்றுகளுக்கு எளிதில் பாதிக்கக்கூடிய ஒன்றாக அவர்களை இது ஆக்குகிறது. பி ஐ டி உள்ள நபர்களுள் கணிசமான பகுதியினர் அதற்கான நோயறிதல் செய்யப்படாமலேயே வாழ்கின்றனர் என்பது அதிர்ச்சியளிக்கும் உண்மை. சிகிச்சையளிக்கப்படாத உடல்நல சிக்கல்கள் மற்றும் அதிகரித்த இடர்வாய்ப்புகளுக்கு இது வழிவகுக்கிறது. பி ஐ டி-ன் பரவலான தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட பச்சிளம் குழந்தைகள் மத்தியில் அதுவும் குறிப்பாக ஓராண்டு வயதிற்கு குறைவான குழந்தைகளில் அதிக உயிரிழப்பு விகிதம் இருப்பது கவலைக்குரியது. இந்நோய் பாதிப்பு கண்டறியப்படாத நிலையே கவலை தரும் இந்த புள்ளி விவரத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்குகிறது. குழந்தைகளை கடுமையான பாதிப்பதாக பி ஐ டி இருக்கின்ற போதிலும், மாறுபடுகிற நோயறிதல் சவால்களோடு வயது வந்த பெரியவர்களையும் இது பாதிக்கக்கூடும். வயது வந்த நபர்களில் இந்த நோய் கண்டறிதலுக்கான பாதையும், பயணமும் மிக நீண்டதாக இருக்கக்கூடும்; தொடக்கநிலை அறிகுறிகள் தோன்றியதிலிருந்து மிகத்துல்லியமாக பி ஐ டி என உறுதி செய்யப்படுபவருக்கு 25 ஆண்டுகள் வரை இது நீளக்கூடும். இந்த தாமதமே, இது குறித்த அதிகரித்த விழிப்புணர்வு மற்றும் தன்முனைப்புடன் ஸ்கிரீனிங் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டு காட்டுகிறது. பி ஐ டி-ஆல் பாதிக்கப்பட்ட நபருக்கு உரிய நேரத்திற்குள் மருத்துவ சிகிச்சையும் மற்றும் மேம்பட்ட சிகிச்சை விளைவுகளும் கிடைப்பதை உறுதி செய்வதற்கு இது அத்தியாவசியம். உலகளவில் 6 மில்லியனுக்கும் அதிகமான நபர்கள் பி ஐ டி - ஆல் அவதியுறுகின்றனர். இவர்களுள் 70-90% நபர்களுக்கு நோயறிதலே செய்யப்படவில்லை என்பது கவலைக்குரியது. இந்தியாவில் மிக நெருக்கமான இரத்த உறவுகளுக்குள் திருமணங்கள் நடைபெறுவது வழக்கமாக இருப்பதால், பி ஐ டி பாதிப்பு நேர்வும் குறிப்பாக அதிகளவு இருக்கிறது. இந்தியாவில் 1 மில்லியனுக்கும் அதிகமான பி ஐ டி நோயாளிகள் இருக்கக்கூடும் என் மதிப்பிடப்பட்டிருக்கிறது. பி ஐ டி என்பது ஒரு மரபியல் பாதிப்பு நிலையின் ஒவ்வொரு கர்ப்ப நிலையும் இதனால் பாதிக்கப்படுவதற்கான பாதிப்பு இருக்கிறது. பிரசவத்திற்கு முன்பு அல்லது கருத்தரித்த 10 முதல் 11 வாரங்களுக்குள் வளர்கருவை பரிசோதிப்பது, கருப்பையில் வளரும் குழந்தை பாதிக்கப்பட்டிருக்கிறதா அல்லது இல்லையா என்பதை கண்டறிய உதவக்கூடும்; அதனடிப்படையில் குடும்பத்தினருக்கு ஆலோசனை வழங்கப்படுவதும் அவசியம்.

உலக சுகாதார நிறுவனத்தின்படி (உலக சுகாதார நிறுவனம்) மற்றும் சர்வதேச நோயெதிர்ப்புத்திறன் சங்கங்கள் 120-க்கும் அதிகமான முதன்மை நோயெதிர்ப்புத்திறன் குறைபாடு கோளாறுகள் இருக்கின்றன. பட்டியலில் சி வி ஐ டி (பொதுவான மாறுபடும் நிலை கொண்ட நோயெதிர்ப்புத்திறன் குறைபாடு) மற்றும் எக்ஸ் எல் ஏ (எக்ஸ்-இணைப்பு கொண்ட காம்மாகோளப்புரதமின்மை) ஆகியவை முதலிடம் பிடிக்கின்றன. சென்னை, அப்போலோ கேன்சர் சென்டர்-ன் குழந்தைகளுக்கான இரத்தப் புற்றுநோய் பிரிவின்

முதுநிலை நிபுணர் டாக்டர். ரேவதி ராஜ், கூறியதாவது, "பெரும்பாலும் கவனிக்காமல் தவறவிடப்படுகிற பி ஐ டி, ஒரு குழந்தையின் உடல்நலத்தை கணிசமாக பாதிக்கக்கூடும். முதன்மை நோயெதிர்ப்புத்திறன் குறைபாடுக்கு தொடக்க நிலையிலேயே கண்டறிதலும், உரிய நேரத்தில் சிகிச்சை வழங்குவதும், நல்ல வாழக்கை தரத்தோடு இக்குழந்தைகள் வாழ்வதற்கு உதவும். இந்நோய் பாதிப்பு குறித்த விழிப்புணர்வு சிகிச்சைக்கு மட்டுமன்றி, அது வராமல் தடுப்பதற்கும் முக்கியமானது. பி ஐ டி உடன் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் ஆரோக்கியமான, நிறைவான வாழ்க்கையை நடத்தும் எதிர்காலத்தை உருவாக்குவதே எமது நோக்கமாகும்." குழந்தைகளுக்கான இரத்தப்புற்று நோய் பிரிவின் நிபுணர் டாக்டர். ரம்யா உப்புலூரி பேசுகையில், "பி ஐ டி பாதிப்பை துல்லியமாக கண்டறிவதை முக்கியப் பங்காற்றுகிற மரபணு பரிசோதனை மற்றும் நோயெதிர்ப்புத்திறன், மதிப்பீடுகள், உட்பட நோயறிதல் சோதனைகளிலிருந்து எலும்புமஜ்ஜை மாற்று சிகிச்சை போன்ற மேம்பட்ட சிகிச்சை முறைகள், பி ஐ டி-களுக்கான எமது சிகிச்சை மையத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் பாதிக்கப்பட்ட நபர்களின் வாழ்க்கையில் அர்த்தமுள்ள மாற்றத்தை உருவாக்க தேவையான நிபுணத்துவமும், தொழில்நுட்பமும், ஆதார வளங்களும் இங்கு அமைந்துள்ளன" என்று கூறினார்.

அப்போலோ ஹாஸ்பிடல்ஸ் எண்டர்பிரைஸ் லிமிடெட்-ன் செயலாக்க துணை தலைவர் டாக்டர். பிரீத்தா ரெட்டி பேசுகையில், "இலட்சக்கணக்கான நபர்களை பாதிக்கிற முதன்மை நோயெதிர்ப்புத்திறன் பற்றாக்குறை குறைபாடு என்ற மிகப்பெரிய சவாலை அநேக நேரங்களில் மௌனமாக நாம் எதிர்கொள்ளும் இத்தருணத்தில் இதற்காக நாம் பயணிக்க வேண்டிய பாதையில் வெளிச்சத்தை உறுதி செய்வதில் அப்போலோ கேன்சர் சென்டர்ஸ் அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது. இப்பாதிப்பு நிலைகள் பற்றிய விழிப்புணர்வு பயனளிக்கும் சிகிச்சைக்கு மட்டுமன்றி நோய் வராமல் தடுப்பதற்கும் இன்றியமையாதது. குடும்பங்கள் மற்றும் சுகாதாரத்துறை பணியாளர்களுக்கு இது குறித்து கற்பிப்பதன் வழியாக ஆரம்ப நிலையிலேயே நோயறிதல் மற்றும் உரிய சிகிச்சையை உறுதி செய்ய நாங்கள் முற்படுகிறோம். இதன் மூலம் எண்ணற்ற குழந்தைகளின் வாழ்க்கையை மேம்பட மாற்றியமைக்க முடியும். பி ஐ டி பாதிப்புள்ள ஒவ்வொரு குழந்தையும் ஆரோக்கியமான மற்றும் நிறைவான வாழ்க்கையை வாழ்கின்ற எதிர்காலத்தை அமைத்து தருவதே எமது குறிக்கோளாகவும், செயல்திட்டமாகவும் இருக்கிறது" என்று குறிப்பிட்டார். பி ஐ டி போராளியான 13 வயதான கவின் பேசுகையில், "அடிக்கடி வருகிற தொற்று நோய்களை எதிர்த்து சமாளிப்பது அச்சத்தையும், கவலையையும் தருகிறது. ஒவ்வொரு முறை இருமலும், காய்ச்சலும் வரும்போது உயிருக்கு ஆபத்து என்ற எண்ணம் தோன்றுகிறது. அப்போலோ கேன்சர் சென்டர்-ல் இது முதன்மை நோயெதிர்ப்புத்திறன் குறைபாடு கோளாறு என கண்டறியப்பட்டு உரிய சிகிச்சையளிக்கப்படும் வரை மிகவும் பயமாக இருந்தது. இங்குள்ள மருத்துவர் குழுவினர் வழங்கிய ஆலோசனையும், தைரியமும் எனக்கு நிம்மதியையும், நிவாரணத்தையும் தந்திருக்கிறது. ஆரோக்கியமான எதிர்காலம் இங்கு எனக்கு உறுதி செய்யப்படும் என்று நான் நம்புகிறேன்" என்று கூறினான்.

ஏ சி சி-ல் அமைந்துள்ள பி ஐ டி நோய்களுக்கான சிகிச்சை மையம், மிக நவீன வசதியை கொண்டிருக்கிறது. குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப்பிரிவு, குழந்தைகளுக்கான தொற்று நோய்கள் மற்றும் பி ஐ டி கண்டறிதலில் திறனும், அனுபவமும் கொண்ட சர்வதேச அளவில் புகழ்பெற்ற நிபுணர்கள் இங்கு பணியாற்றுவது ஆகியவை இவற்றுள் குறிப்பிடத்தக்கது. பாதிப்பிற்கு சிகிச்சையளிப்பது என்பதையும் கடந்து பி ஐ டி வரலாறு உள்ள குடும்பங்களுக்கு மரபியல் சார்ந்த ஆலோசனை வழங்குவது போன்ற இந்நோய் வராமல் தடுப்பதற்கான தன்முனைப்பு நடவடிக்கைகளையும் ஏ சி சி நம்புகிறது. முதன்மை நோய்எதிர்ப்புத்திறன் குறைபாடு கோளாறுகளை சுற்றிய புரிதலையும், விழிப்புணர்வையும் பரவலாக்குவதன் வழியாக பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உறுதி செய்ய ஏசிசி தீவிரமாக பாடுபடுகிறது.

# ஸ்ரீராம் ஒன் செயலி மற்றும் வலைதளத்தில் மட்டும் பிரத்யேகமாக கிடைக்கப் - பெறும் ஃபிக்சட் டெபாசிட்டுகளை அறிமுகம் செய்யும் ஸ்ரீராம் ஃபைனான்ஸ்

சென்னை, 01 மே 2024: இந்தியாவின் மிகப்பெரிய வங்கி சாரா நிதி நிறுவனங்களுள் ஒன்றான ஸ்ரீராம் ஃபைனான்ஸ் லிமிடெட் (எஸ் எஃப் எல்), ஸ்ரீராம் ஒன் செயலி மற்றும் இந்நிறுவனத்தின் வலைதளமான <https://www.shriramfinance.in/> என்பவற்றுள் வழியாக மட்டுமே கிடைக்கப்பெறுகிற டிஜிட்டல் வழிமுறையில் மட்டுமே செயல்படும் ஃபிக்சட் டெபாசிட் (எஃப் டி) திட்டத்தை 2024 ஏப்ரல் 22 திங்கள் முதல் வழங்குகிறது. வழக்கமாக, எஸ் எஃப் எல்-ன் திட்டங்கள் அனைத்தும் ஆன்லைன் வழிமுறையிலும் மற்றும் அதன் அலுவலகங்கள் வழியாக நேரடியாகவும் இதுவரை கிடைக்கப்பெற்றன.

15 மாதங்கள் என்ற காலஅளவுடன் கூடிய ஸ்ரீராம் உன்னாட்டி எஃப் டி (காலவரை வைப்புத் தொகை)-ஐ, 8.15% என்ற வட்டி வீகிதத்தில் வாடிக்கையாளர்கள் பெறமுடியும். மூத்த குடிமக்களும் மற்றும் பெண் டெபாசிட்தாரர்களும் முறையே 0.50% மற்றும் 0.10% என்ற கூடுதல் ஆதாயப்பலனை இந்த டெபாசிட்டுகள் மீது பெறுவார்கள். அதே நேரத்தில், டிஜிட்டல் முறையில் அல்லது ஆன்லைன் சேனல்கள் வழியாக பிக்சட் டெபாசிட்டுகளின் புதுப்பிப்பை செய்யும்போது 0.25% என்ற கூடுதல் ஆதாயத்தை அனைத்து டெபாசிட்தாரர்களும் பெறலாம். பிற காலஅளவுகளைக் கொண்ட உன்னாட்டி பிக்சட் டெபாசிட்டுகள் ஆன்லைன் மற்றும் ஆஃப்லைன் ஆகிய இரு வழிமுறைகளிலும் கிடைக்கப்பெறும் நிலையில் இந்த குறிப்பிட்ட 15 மாத காலஅளவு கொண்ட பிக்சட் டெபாசிட்டுகள் மட்டும் ஸ்ரீராம் ஒன் செயலி மற்றும் இந்நிறுவனத்தின் வலைதளத்தில் மட்டுமே வழங்கப்படும். இதற்கான குறைந்தபட்ச டெபாசிட் தொகை ரூ. 5000 என்பதாக இருக்கும். இந்த புதிய திட்ட அறிமுகத்தோடு சேர்த்து நிரந்தர வருவாய் திட்டத்தை அல்லது தொடர்வைப்பு டெபாசிட் (ஆர் டி) திட்டத்தை ஸ்ரீராம் ஒன் செயலி மற்றும் எஸ் எஃப் எல் வலைதளத்தில் மட்டுமே பிரத்யேகமாக கிடைக்கப்பெறுமாறு எஸ் எஃப் எல் மாற்றியிருக்கிறது. இதுவரை டிஜிட்டல் மற்றும் ஆஃப்லைன் ஆகிய இரு வழிகளிலும் இத்திட்டங்கள் சந்தையாக்கல் செய்யப்பட்டு வந்தன. பெண் டெபாசிட்தாரர்களுக்கு 0.10% என்ற அளவுக்கு கூடுதல் வட்டி விகித ஆதாயமும் கிடைக்கும். இத்திட்டத்தின் கீழ் குறைந்தபட்ச டெபாசிட் தொகை ஒரு மாதத்திற்கு ரூ. 1000 என்பதாக இருக்கும். டிஜிட்டல் முறையில் மட்டும் செய்யப்படக்கூடிய பிக்சட் டெபாசிட் மற்றும் எப் ஐ பி (தொடர்வைப்பு - ஆர் டி) திட்டம் 2024 ஏப்ரல் 22 முதல் ஸ்ரீராம் ஒன் செயலி மற்றும் ஸ்ரீராம் ஃபைனான்ஸ் வலைதளத்தில் மட்டுமே கிடைக்கப்பெறும். அந்த நாள் முதல், ஸ்ரீராம் ஃபைனான்ஸ்-ன் கிளைகளில் அல்லது நிறுவனத்தின் பிரதிநிதிகள் வழியாக வாடிக்கையாளர்களால் மேற்கொள்ள இயலாது. ஸ்ரீராம் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் செயலாக்க துணை தலைவர், திரு. உமேஷ் ரேவன்கர், இப்புதிய டெபாசிட் திட்டங்கள் பற்றி கூறியதாவது: "பல புதுமையான நிதித்திட்டங்களை ஸ்ரீராம் குழுமம் வழக்கமாக தொடர்ந்து அறிமுகம் செய்து வந்திருக்கிறது. இந்தியாவின் டிஜிட்டல் முன்னேற்ற நகர்வு சரியான வேகத்தில் முதிர்ச்சி நிலையை எட்டியிருக்கிறது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இளம் முதலீட்டாளர்கள் டிஜிட்டல் செயல்முறைகளில் ஆர்வத்தையும், நிபுணத்துவத்தையும் கொண்டவர்களாக மாறி வருகின்றனர். பாரம்பரியமான செயல்திட்டங்களில் முதலீடு செய்வதற்கு பாரம்பரிய அல்லாத வழிமுறைகளை ஆராய்வதிலும், பயன்படுத்துவதிலும் அவர்கள் முனைப்புக் காட்டுகின்றனர். டிஜிட்டல் முறையில் மட்டும் வழங்கப்படும் திட்டங்களின் மூலம் டிஜிட்டல் இந்தியா இயக்கத்தை மேலும் துரிதமாக்க நாங்கள் விரும்புகிறோம்; வசதியான வழிமுறைகள் மூலம் தங்களது சொத்தையும் நிதி ஆதாரத்தையும் டெபாசிட்தாரர்கள் அதிகரிப்பதை இதன் மூலம் ஏதுவாக்குவதே எமது விருப்பம். மிக உயர்ந்த தர நிலைகளில் தொழில்நுட்பத்தால் ஏதுவாக்கப்படும் சேவைகளை எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கி அவர்களின் மகிழ்ச்சியையும், திருப்தியையும் உறுதிசெய்வது எமது குறிக்கோளாகும்."

# இந்தியாவில் 175 கோடி தடுப்பூசி போடப்பட்டது கோவிஷீல்டு தடுப்பூசியால் ரத்த உறைவு, பக்கவிளைவு ஆஸ்ட்ராஜெனக்கா நிறுவனம் ஒப்புதல்

சென்னை, 01 மே 2024: கொரோனாவை தடுக்க இந்தியாவில் போடப்பட்ட கோவிஷீல்டு தடுப்பூசியால் 'ரத்தம் உறைதல்' பாதிப்பு ஏற்படலாம் என ஆஸ்ட்ராஜெனக்கா நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.

இது தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்தியாவில் 175 கோடிக்கும் அதிகமான கோவிஷீல்டு தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை தெரிவித்திருந்தது.

கடந்த 2019 டிசம்பர் இறுதியில் பரவத் தொடங்கி உலகம் முழுவதும் பெருமளவில் பாதிப்புகளை ஏற்படுத்திய கொரோனாவை தடுக்க தடுப்பூசிகள் உருவாக்கப்பட்டன. இந்தியாவிலும் கொரோனாவை தடுக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக தடுப்பூசி போடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டன. அந்த வகையில் கோவிஷீல்டு மற்றும் கோவாக்சின் தடுப்பூசி போட்டு கொள்ள மத்திய அரசு அனுமதி அளித்தது.

கோவேக்சின் தடுப்பூசியை இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலுடன் இணைந்து ஐதராபாத்தில் உள்ள பாரத் பயோடெக் நிறுவனம் தயாரித்தது. இதன் செயல்திறன் 81 சதவீதம் என தெரிவிக்கப்பட்டது. ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் மற்றும் இங்கிலாந்து நாட்டை சேர்ந்த ஆஸ்டிராஜெனேகா நிறுவனம் இணைந்து கண்டுபிடித்த கோவிஷீல்டு தடுப்பூசியை புனேவில் உள்ள சீரம் நிறுவனம் தயாரித்தது. இதன் செயல்திறன் 70 சதவீதம் என அப்போது தெரிவிக்கப்பட்டது.

நம்முடைய நாட்டில் கோடிக்கணக்கானோர் இந்த இரு வகை தடுப்பூசிகளை அதிகம் பயன்படுத்தினர். இவற்றில் கோவிஷீல்டு தடுப்பூசியே இந்தியாவில் பரவலாக தட்டுப்பாடின்றி கிடைத்தது.

இந்தியாவில் சுமார் 175 கோடிக்கும் அதிகமாக கோவிஷீல்டு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என மத்திய சுகாதாரத்துறை தெரிவித்திருந்தது. இதுவே பாக 10 கோடி கோவிஷீல்டு தடுப்பூசி டோஸ்கள் இந்தியாவில் வீணாகி விட்டன என்றும் கூறப்பட்டது. இந்த நிலையில், கோவிஷீல்டு தடுப்பூசி போட்டு கொண்ட பின்னர் மரணங்களும் மற்றும் கடுமையான காயங்களும் நிறைய பேருக்கு ஏற்பட்டு உள்ளன என புகார் எழுந்தது. இதனை தொடர்ந்து, இங்கிலாந்து ஐகோர்ட்டில் இதற்கு எதிராக 51-க்கும் மேற்பட்ட வழக்குகள் தொடரப்பட்டன. ரூ.1,047 கோடி வரை இழப்பீடு தொகை தர வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இந்த நிலையில், கோவிஷீல்டு தடுப்பூசிக்கு பிரிட்டனில் அனுமதி மறுக்கப்படும் முன், அங்கு இந்த தடுப்பூசியை செலுத்திக் கொண்ட ஜேமி ஸ்காட் என்ற நபருக்கு, ஆஸ்ட்ராஜெனக்கா தயாரித்த தடுப்பூசியை செலுத்திக்கொண்டதால் மூளையில் தீவிர பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

கடந்த 2021ம் ஆண்டு ஏப்ரலில் ஜேமி ஸ்காட்க்கு முதன்முதலில் இந்த தடுப்பூசி செலுத்தப்பட்டது. அதன் பின்னர் மூளையில் ரத்தம் உறைந்து நிரந்தர பாதிப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து ஆஸ்ட்ராஜெனக்கா நிறுவனம் மீது முதல் முதலில் ஜேமி ஸ்காட்டால் பிரிட்டன் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கின் விசாரணையில் ஆஸ்ட்ராஜெனக்கா தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கையில், அந்நிறுவனத்தின் தயாரிப்பான 'கோவிஷீல்டு' தடுப்பூசியை செலுத்திக் கொண்டோரில், ஒரு சிலருக்கு மிக அரிய வகையாக டி.டி.எஸ். என்ற பாதிப்பு ஏற்படும் என தெரிவித்துள்ளது. இந்த டி.டி.எஸ். பாதிப்பால் ரத்த உறைதல் ஏற்படுவதுடன், மனிதர்களின் ரத்தத்தில் ரத்த தட்டுகளின் எண்ணிக்கை குறையும் அபாயம் இருக்கும் என்ற அதிர்ச்சி தகவலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு குறித்த விரிவான தகவல் விரைவில் வெளியிடப்படுமென்று தெரிகிறது.

இந்த தகவல் இந்தியாவில் தடுப்பூசி போட்டு கொண்டவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. நம்முடைய நாட்டில், மிக இளம் வயதில் திடீரென இளைஞர்கள், இளம்பெண்கள் பலர் ஜிம், திருமண விருந்து, திருவிழாக்கள் போன்ற பல்வேறு இடங்களில் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படுவது சமீப காலங்களாக அதிகரித்து காணப்படுகிறது. கொரோனா தடுப்பூசி போட்டு கொண்ட பின்னரே இந்த நிலை காணப்படுகிறது என்ற குற்றச்சாட்டும் பரவலாக எழுந்தது குறிப்பிடத்தக்கது.

## எதிர்கால-தொழில்நுட்ப களங்களில் இளைஞர்களை மேம்படுத்துவதற்கான தேசிய திறன் திட்டம்: 'சாம்சங் இனோவேஷன் கேம்பஸ்' - ன் 2வது சீசனை தொடங்கும் சாம்சங் இந்தியா

கோயம்புத்தூர், 01 மே 2024: இந்தியாவின் மிகப்பெரிய நுகர்வோர் மின்னணு பிராண்டான சாம்சங், அதன் தேசிய திறன் திட்டமான சாம்சங் இன்னோவேஷன் கேம்பஸின் இரண்டாவது சீசனை தொடங்கியிருக்கிறது. செயற்கை நுண்ணறிவு, ஐ ஓ டி, பிக் டேட்டா, மற்றும் கோடிங் & புரோகிராமிங் போன்ற எதிர்கால தொழில்நுட்ப களங்களில் இளம் தலைமுறையினரை மேம்படுத்த இத்திறன் பயிற்சி திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. சாம்சங் இன்னோவேஷன் கேம்பஸ், 18-25 வயது பிரிவுள்ள இளைஞர்களை எதிர்கால தொழில்நுட்பங்களில் மேம்படச் செய்வதையும் மற்றும் அவர்களின் வேலைவாய்ப்பை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தியாவின் வளர்ச்சி வரலாற்றில் வலுவான பார்ட்னராகவும், சிறப்பான பங்களிப்பாளராகவும் இருப்பதில் சாம்சங்கின் உறுதிப்பாட்டை இத்திட்டம் வலுப்படுத்துகிறது. இளைஞர்களுக்கு சரியான வாய்ப்புகளை உருவாக்குவதற்கான ஸ்கில் இந்தியா மற்றும் டிஜிட்டல் இந்தியா போன்ற இந்திய அரசின் முன்முயற்சி திட்டங்களை ஆதரிக்கும் வகையிலும் இது உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியா முழுவதும் 3,500 மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் சாம்சங் மற்றும் இந்திய எலக்ட்ரானிக்ஸ் துறை திறன் கவுன்சில் (இ எஸ் எஸ் சி ஐ) ஆகியவற்றிற்கிடையே இந்த வார தொடக்கத்தில் கையெழுத்தானது.

வெறும் மனே திறனளிப்பு என்பதையும் கடந்து மாணவர்களுக்கு அதிக உற்சாகமளிக்கும் வாய்ப்புகளை வழங்குவதும் இந்த ஆண்டுக்கான இச்செயல்திட்டத்தின் குறிக்கோளாகும். ஒவ்வொரு தளத்திலிருந்தும் தேசிய அளவில் முதலிடம் பெறுபவர்களுக்கு ரூ. 1 லட்சம் ரொக்கப் பரிசுடன் டெல்லி / என் சி ஆர் - ல் அமைந்துள்ள சாம்சங் தொழிலகங்களையும், அலுவலகத்தையும் பார்வையிடும் வாய்ப்பையும் பெறுவார்கள். சாம்சங் - தொழிலகங்களுக்கான வருகைகள், சாம்சங் - ன் தலைமைத்துவ பணியாளர்கள் குழுவுடன் கலந்துரையாடவும் வழிகாட்டுதல் ஆலோசனையைப் பெறவும் ஒரு நல்ல வாய்ப்பை வழங்கும். தேசிய அளவிலான இச்செயல்திட்டத்தில் முதலிடம் பெறுபவர்களுக்கு சாம்சங் கேலக்ஸி பட்ஸ் மற்றும் சாம்சங் கேலக்ஸி




ஸ்மார்ட்வாட்ச்கள் போன்ற சாம்சங் - ன் சிறப்பான தயாரிப்புகளும் அன்பளிப்பாக வழங்கப்படும். "சாம்சங் நிறுவனம், இந்தியாவில் கடந்த 28 ஆண்டுகளாக நாட்டின் வளர்ச்சிக்கு உறுதியான பார்ட்னராக இருந்து வருகிறது. எங்களின் தொலைநோக்கு திட்டம் எப்பொழுதும் இளைஞர்களை திறன் மிக்கவர்களாக ஆக்குதல் மற்றும் தொழில்சார் வளர்ச்சி வாய்ப்புகள் மூலம் அவர்களுக்கு அதிகாரம் அளிப்பது ஆகிய இந்திய அரசின் சிறப்பான நோக்கங்களுடன் இணக்கமாக பயணிக்கிறது. சாம்சங் இன்னோவேஷன் கேம்பஸ் மூலம், திறன் அடிப்படையிலான கற்றல் தளத்தை நாங்கள் உருவாக்கி வருகிறோம்; அது இளைஞர்களின் திறன்களை அதிகரிக்கும்; எதிர்கால தொழில்நுட்ப களங்களில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் மற்றும் அர்த்தமுள்ள மாற்றத்தை சாத்தியமாக்கும்" என்று சாம்சங் நிறுவனத்தின் தென்மேற்கு ஆசியாவிற்கான தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியுமான திரு. ஜேபி பார்க் கூறினார். இ எஸ் எஸ் சி ஐ என்பது, திறன் மேம்பாடு அமைச்சகத்தின் ஆதரவின் கீழ் தொழில்துறை சார்ந்த சங்கங்களால் நிறுவப்பட்டிருக்கும் ஒரு தேசிய அளவிலான திறன் வழங்கல் அமைப்பாகும். தேசிய திறன் மேம்பாடு வாரியத்தின் கீழ்துறை சார்ந்த திறன் கவுன்சிலாக இது செயல்படுகிறது. அங்கீகாரம் அளிக்கப்பட்ட பயிற்சி கல்வி பார்ட்னர்களின் தேசிய அளவிலான வலையமைப்பின் வழியாக உள்ளூர் அளவிலான பயிற்சியினை இது வழங்குகிறது. சிறப்பான எதிர்கால தொழில்நுட்ப கல்விக்கு எளிதான அணுகுவசதி இல்லாத மாணவர்கள் வசிக்கும் இந்தியாவின் சிறு நகரங்களில் இக்கல்வித் திட்டங்களை வழங்குவதற்கான வாய்ப்புகள் குறித்தும் இ எஸ் எஸ் சி ஐ ஆராயும். "இந்நாட்டில் திறன் சூழலமைப்பை வலுப்படுத்துகின்ற ஒரு சி எஸ் ஆர் முன்னெடுப்பிற்காக சாம்சங் உடன் இணைந்து செயல்படுவதில் இ எஸ் எஸ் சி ஐ பெருமகிழ்ச்சியடைகிறது. இந்நாட்டின் இளம் தலைமுறையினருக்கு அதுவும் குறிப்பாக வசதியற்ற பின்புலங்களைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்கால தொழில்நுட்பக் களங்களில் தேவைப்படும் அறிவையும், திறனளிப்பையும் வழங்குவதற்கான எமது குறிக்கோள்களோடு மிக நேர்த்தியாக பொருந்தும் வகையில் சாம்சங் இனோவேஷன் கேம்பஸ் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டமானது, தொழில்நுட்ப திறனறிவை மாணவர்களுக்கு வழங்கி அவர்களை பணியாற்ற தயார்நிலையில் உள்ளவர்களாக உருவாக்கும் என்று நாங்கள் வலுவாக நம்புகிறோம்.," என்று இ எஸ் எஸ் சி ஐ - ன் தலைமை இயக்க அதிகாரி (தலைமை செயலாக்க அதிகாரியாக பொறுப்பு வகிக்கும்) டாக்டர். அபிலாஷா கௌர் கூறினார். இக்கல்வித்திட்டத்தின் போது பயிற்றுனர் வழிநடத்தும் வகுப்பறை மற்றும் ஆன்லைன் பயிற்சியினை பங்கேற்பாளர்கள் பெறுவார்கள். நாடெங்கிலும் அமைந்துள்ள இ எஸ் எஸ் சி ஐ - ன் அங்கீகாரம் அளிக்கப்பட்ட பயிற்சி மற்றும் கல்வி பார்ட்னர்கள் இதனை வழங்குவார்கள். இக்கல்வி திட்டத்திற்காக சேர்க்கப்படும் இளையோர்கள், வகுப்பறை மற்றும் ஆன்லைன் பயிற்சியில் பங்கேற்பார்கள்; செயற்கை நுண்ணறிவு, ஐ ஓ டி, பிக் டேட்டா மற்றும் கோடிங் மற்றும் புரோகிராமிங் போன்ற அவர்கள் தேர்வு செய்த தொழில்நுட்ப பிரிவுகளில், நேரடியான கேப்ஸ்டோன் புராஜெக்ட் பணியையும் அவர்கள் நிறைவு செய்வார்கள். பணியமர்த்தப்படுதலுக்கான அவர்களின் தகுதிநிலையை அதிகரிக்க மென்திறன் பயிற்சியும் அவர்களுக்கு வழங்கப்படும். இந்தியாவெங்கிலும் உள்ள இ எஸ் எஸ் சி ஐ - ன் பயிற்சி மற்றும் கல்வி பார்ட்னர்கள் வழியாக இதன் பங்கேற்பாளர்கள் ஒன்று திரட்டப்படுவார்கள். ஆஃப்லைன் மற்றும் ஆன்லைன் கற்றல், சிறப்பான ஹேக்கத்தான் மற்றும் கேப்ஸ்டோன் புராஜெக்ட்கள் ஆகியவற்றோடு சாம்சங் பணியாளர்களால் வழங்கப்படும் நிபுணத்துவ வழிகாட்டலும் இந்த அணுகுமுறையில் உள்ளடங்கும். தேர்வு செய்த கல்வித்திட்டத்தைச் சார்ந்து இதன் பாடத்திட்ட கட்டமைப்பு மாறுபடும். எடுத்துக்காட்டாக செயற்கை நுண்ணறிவை (ஏ ஐ) தேர்வு செய்த பணியாளர்கள் 270 மணி நேரங்களுக்கு கோட்பாடு சார்ந்த பயிற்சியைப் பெறுவதோடு, 80 மணி நேரங்கள் புராஜெக்ட் ஒர்க்கையும் நிறைவு செய்வார்கள். ஐ ஓ டி அல்லது பிக் டேட்டா கோர்ஸ்களை பயில்பவர்கள், 160 மணி நேர கோட்பாடு சார்ந்த பயிற்சியிலும், 80 மணி நேர புராஜெக்ட் ஒர்க்கிலும் ஈடுபடுவார்கள். கோடிங் மற்றும் புரோகிராமிங் திட்டத்தின் பங்கேற்பாளர்கள் 80 மணி நேர பயிற்சியில் ஈடுபடுவதுடன், 3 நாட்கள் நடைபெறும் ஹேக்கத்தான் நிகழ்விலும் பங்கேற்பார்கள். இக்கல்வி திட்டம், 4 மாநிலங்களில் அமைந்துள்ள 8 கல்வி நிலையங்கள் வழியாக நடைபெறும். வடபிராந்தியத்தில் லக்னோ மற்றும் கோரக்பூரிலும் மற்றும் டெல்லி என்சிஆர் - ல் இரு பயிற்சி மையங்களும் நிறுவப்படும். தமிழ்நாடு மற்றும் கர்நாடகா மாநிலங்களைப் பொறுத்தவரை சென்னை மற்றும் ஸ்ரீபெரும்புதூரில் இரு பயிற்சி மையங்களும், பெங்களூருவில் இரு மையங்களும் நிறுவப்படும். 6 மாத கால அளவினைக் கொண்ட இத்திட்டம், 2024 ஏப்ரல் மாதத்தின்போது தொடங்கப்பட்டு, 2024 அக்டோபர் மாதத்தின்போது நிறைவடையும். இக்கல்வி திட்டங்களில் முதலிடம் பெறும் சாதனையாளர்களின் பெயர்கள் நவம்பர் 2024 - ல் அறிவிக்கப்படும். 2023-ம் ஆண்டின்போது எதிர்கால தொழில்நுட்ப கல்வித்திட்டங்களில் 3000 மாணவர்களுக்கு சாம்சங் இனோவேஷன் கேம்பஸ் வெற்றிகரமாக பயிற்சியளித்தது. இந்தியாவில் கார்ப்பரேட் சமூக பொறுப்புறுதி (சி எஸ் ஆர்) செயல்பாடுகளில் வழியாக, தேச கட்டமைப்பின் மீது அது கொண்டிருக்கும் பொறுப்புறுதியை இந்த முனைப்புத்திட்டத்தில் சாம்சங் - ன் ஈடுபாடு நேர்த்தியாக சுட்டிக்காட்டுகிறது. சாம்சங் சால்வ் ஃபார் டுமாரோ என்பது உட்பட, சாம்சங் - ன் பிற சிஎஸ்ஆர் முயற்சிகளுக்கு இத்திட்டம் வலு சேர்க்கிறது. இந்த முன்னெடுப்புகளின் வழியாக அர்த்தமுள்ள மாற்றத்தை உருவாக்க அவசியமான கல்வி மற்றும் திறன்களை வழங்குவதன் மூலம் இந்தியாவின் எதிர்கால தலைவர்களான இளம் தலைமுறையினருக்கு திறனதிகாரம் அளிப்பதே சாம்சங் - ன் நோக்கம்.

## கார்களின் பாதுகாப்பு, பராமரிப்பிற்காக டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனத்தின் புதிய "டி க்ளோஸ்" சேவை

சேலம், 01 மே 2024: 'வாடிக்கையாளர்களுக்கு முதலிடம்' என்னும் தாரக மந்திரத்துடன் இந்தியாவில் டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில் அதன் புரட்சிகர கார் பராமரிப்பு பிராண்டான "டி க்ளோஸ்" ஐ அறிமுகப்படுத்துவதாக இன்று அறிவித்தது. இந்தியாவில் உள்ள வாடிக்கையாளர்கள் இடையே கார்களை அழகாக வடிவமைக்க வேண்டும் என்ற எண்ணம் அதிகரித்து வரும் இந்த சூழலில் அவர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இந்த திட்டத்தை டொயோட்டோ நிறுவனம் அறிவித்துள்ளது. இது கார் பராமரிப்புத் துறையை மறுவரையறை செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.




வரும் மே 1-ந்தேதி முதல், இந்தியாவில் உள்ள அனைத்து அங்கீகரிக்கப்பட்ட டொயோட்டா டீலர்ஷிப்பிலும் "டி க்ளோஸ்" பராமரிப்பு சேவைகள் வழங்கப்பட உள்ளது. இதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு மிகவும் தரமான கார் பராமரிப்பு தீர்வுகளை டொயோட்டா வழங்க உள்ளது. இதன் காரணமாக இது கார் உரிமையாளர்களுக்கு மகிழ்ச்சியான அனுபவத்தை உறுதி செய்கிறது. இதன் கீழ் எந்த ஒரு காருக்கும் உட்புறத்திலும் வெளியேயும் வாகனத்தின் தோற்றத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு வகையான சேவைகளை டொயோட்டா வழங்க உள்ளது. இதில் செராமிக் கோட்டிங், கார்களின் பாதுகாப்பிற்காக கீழ்புறத்தில் கோட்டிங், சைலன்சர் கோட்டிங் மற்றும் இன்டர்னல் பேனல் பாதுகாப்பு ஆகியவை அடங்கும். இவை வாகனங்களை மிகவும் அழகாக காட்டுவதோடு மட்டுமல்லாமல் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையில் குறிப்பிட்ட அளவிலான பாதுகாப்பையும் வழங்குகிறது.

இந்த மையத்தில் வாடிக்கையாளர்கள் தாங்கள் விரும்பியவாறு காரின் உட்புறம் மற்றும் வெளிப்புறத்தை அழகுபடுத்திக் கொள்ளலாம். இது காருக்கு புதியதொரு தோற்றத்தை வழங்குகிறது. அதன் அழகிற்கு மேலும் அழகு சேர்க்கும் விதமாக இருக்கும். மேலும், பயணிகளின் நல்வாழ்வை கருத்தில் கொண்டு " டி க்ளோஸ்" சேவைகள் இதற்கு அப்பால் ஏ சி குழாய்களில் எந்தவித அழுக்கு மற்றும் மாசு ஏதும் இல்லாத வகையில் சுத்தம் செய்து ஆரோக்கியமான சூழலை மேம்படுத்துகிறது. அனைத்து சேவைகளும் வாகனங்களின் உட்புறம் மற்றும் வெளிப்புறங்களுக்கு புத்துயிர் அளிக்கும் வகையில் இருக்கும். இது டொயோட்டா உரிமையாளர்களுக்கு புதிய பெருமை மற்றும் திருப்தியை அளிக்கும்.

இது குறித்து டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனத்தின் பயன்படுத்தப்பட்ட கார் வர்த்தக விற்பனை மற்றும் சேவைப் பிரிவு துணைத் தலைவர் சபரி மனோகர் கூறுகையில், 'டி க்ளோஸ்' என்னும் எங்களின் இந்த புதிய திட்டம் என்பது 'வாடிக்கையாளர்களுக்கு முதலிடம்' என்னும் எங்கள் தாரக மந்திரத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டும் ஒரு புதுமையான மற்றும் தொழில்துறை முதல் முயற்சியாகும். கார்களை முறையாக பராமரித்து அழகாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்பும் வாடிக்கையாளர்களின் தேவையை கருத்தில் கொண்டு அவர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் நாங்கள் எங்களின் "டி க்ளோஸ்" திட்டத்தை துவக்கி உள்ளோம் என்று தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில் "டி க்ளோஸ்" என்பது வாடிக்கையாளர்களுக்கு உயர்தர கார் பராமரிப்பு தீர்வுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டதாகும், இது குறிப்பாக டொயோட்டா வாகனங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது, இது வாகனங்களின் பாதுகாப்பையும் பராமரிப்பையும் உறுதிசெய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அறிமுகமானது, டொயோட்டா உரிமையாளர்களுக்கு எங்கள் முக்கிய மதிப்புகளான தரம், ஆயுள் மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றுடன் தடையின்றி சீரமைக்கும் அனைத்தையும் உள்ளடக்கிய கார் பராமரிப்பு தீர்வை வழங்கும் எங்கள் பயணத்தில் குறிப்பிடத்தக்க மற்றொரு முக்கியமான மைல்கல்லைக் குறிக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

பல ஆண்டுகளாக, மதிப்பு கூட்டப்பட்ட சேவைகள் மூலம் சரியான நேரத்தில் மற்றும் பொருத்தமான முன்முயற்சிகளை செயல்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர் அனுபவங்களை தொடர்ந்து மேம்படுத்துவதற்கு டோயோட்டா முயன்று வருகிறது. இதில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட "அற்புதமான புதிய கார் டெலிவரி தீர்வு", 5-ஆண்டுகளுக்கான இலவச சாலையோர உதவித் திட்டம் மற்றும் சிறப்புத் திட்டங்கள் ஆகியவை அடங்கும். இது டொயோட்டா வாகனத்தை சொந்தமாக வைத்திருக்கும் கனவை நனவாக்கும் நோக்கத்துடன், இதன் தற்போதைய வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியான உரிமை அனுபவத்தை உறுதி செய்கிறது.

## தமிழ்நாடு வட்டத்தைச் சேர்ந்த தொலைத் தொடர்பு / பிஎஸ்என்எல் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் விநியோகிக்கும் அமைப்பு மாற்றப்பட்டுள்ளது

சென்னை, 01 மே 2024: தமிழ்நாடு வட்டத்தைச் சேர்ந்த தொலைத் தொடர்பு / பி எஸ் என் எல் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் விநியோகிக்கும் அமைப்பு மாற்றப்பட்டுள்ளது. வங்கிகள் மற்றும் அஞ்சலகங்களிலிருந்து ஓய்வூதியம் அல்லது குடும்ப ஓய்வூதியம் பெற்றவர்கள் தொலைத் தொடர்புத் துறையின் சம்பான் (SAMPANN) போர்ட்டலுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இனி இவர்களின் ஓய்வூதியம் தமிழ்நாடு வட்டத்தின் தொடர்பு கணக்குகளின் முதன்மை கட்டுப்பாட்டாளர் (பி ஆர் சி சி ஏ) அலுவலகம் மூலம் வழங்கப்படும்.

ஓய்வூதியதாரர்களும், குடும்ப ஓய்வூதியதாரர்களும், தங்களின் ஓய்வூதியம் தடைபடாமலிருக்க வருடாந்தர வாழ்க்கைச் சான்றிதழை டிஜிட்டல் முறையில் சம்பான் போர்ட்டல் அல்லது ஜீவன் பிரமாண் மூலம் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். டிஜிட்டல் முறையிலான வாழ்க்கைச் சான்றிதழ், உங்கள் ஓய்வூதியரை அறிந்து கொள்ளுங்கள் என்பதற்கான படிவங்களும் மற்ற விவரங்களும் https://cgca.gov.in/ccatn என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் கிடைக்கும்.

மேலும் தடையின்றி ஓய்வூதியம் பெறுவதற்கு உங்கள் ஓய்வூதியரை அறிந்து கொள்ளுங்கள் என்பதற்கான படிவங்களை "பிஆர்சிசிஏ, தமிழ்நாடு, 60, எத்திராஜ் சாலை, எழும்பூர், சென்னை 600 008 என்ற முகவரிக்கு விரைவு அஞ்சல் மூலமாகவோ, dyccapen.ccatn@nic.in என்ற மின்னஞ்சல் முகவரியிலோ அனுப்பிவைக்கலாம்.

## தொலைத் தொடர்புத்துறை உரிமதாரர்களுக்கான தொடர்பு முகாம் 11.05.2024 அன்று குன்னூரில் நடைபெறவுள்ளது

சென்னை, 01 மே 2024: தொலைத் தொடர்புத்துறை உரிமதாரர்களுக்கான தொடர்பு முகாம் 11.05.2024 அன்று குன்னூரில் நடைபெறவுள்ளது. இந்த முகாமின் போது உரிமதாரர்கள் சரஸ் (SARAS) போர்ட்டல் மூலம் காலாண்டு மற்றும் வருடாந்தர ஆவணங்களை எவ்வாறு பதிவேற்றம் செய்வது, இந்தப் போர்ட்டல் மூலம் எவ்வாறு பணம் செலுத்துவது என்பது பற்றி விளக்கம் அளிக்கப்படும். இத்துடன் குறைதீர்ப்பு முகாமும் நடைபெறும்.

குன்னூர் பி எஸ் என் எல் எக்ஸ்சேஞ்ச் மாநாட்டு அரங்கம், முதல் மாடி, கிரேஸ் ஹில், குன்னூர், நீலகிரி - 643 101 என்ற முகவரியில் 11.05.2024 அன்று காலை 10 மணிக்கு இந்த முகாம் நடைபெறும்.

இது குறித்த அறிவிப்பு மற்றும் இதர விவரங்கள் www.cgca.gov.in/ccatn என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.